# பருத்தித்துறை நகர சபை

## யாழ்ப்பாண மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 ஏப்ரல் 07 ஆந் திகதி கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2010 மார்ச் 31 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய பருத்தித்துறை நகர சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் புத்தகங்களைப் பராமரித்து வந்திருந்தது என்றும், இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி பருத்தித்துறை நகர சபையின் நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு என்பவற்றை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைவாக நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் பின்பற்றிய கணக்கீட்டுக் கொள்கைகள் கணக்குகளுடன் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிசார் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என சந்தர்ப்பங்கள் மற்றும் பெறுமதிகளின் கீழ் கீழே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| | நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | சொத்துக்கள் | | பொறுப்புக்கள் | | வருமானம் | | செலவினம் | |
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி |
| | | ரூபா | | ரூபா | | ரூபா | | ரூபா |
| கணக்குகளில் அதிகரித்துக் காட்டல்கள் | | | | | 02 | 141,810 | 01 | 67,061 |
| கணக்குகளில் குறைத்துக் காட்டல்கள் | 01 | 277,000 | 01 | 492,774 | - | - | - | - |
| கணக்குகளில் விடுபாடுகள் | | | 01 | 858,179 | | | | |

### 1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 786,502 ஆக இருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

#### கணக்காய்விற்கு தகவல்களைச் சமர்ப்பிக்காமை

தேவையான தகவல்கள் இன்மை காரணமாக மொத்தம் ரூபா 3,548,937 ஆன கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

### 1.2.4 இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள். விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்தவத் தீர்மானங்களுக்கான தொடர்பு** | **இணங்கி ஒழுகாமைகள்** |
|---|---|
| **(அ)** தாபன விதிக்கோவை | |
| VIII ஆம் அத்தியாயத்தின் 10 ஆம் பிரிவு | தாபன விதிக்கோவைக்கு முரணாக வார இறுதி மற்றும் விடுமுறை தினங்களில் 6 மணித்தியாலத்திற்கு குறைவாக கடமையாற்றிய பொதுச் சுகாதார உத்தியோகத்தரிற்கு ரூபா 16,100 செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) பொது நிதிச் சுற்றறக்கை | |
| 2004 ஒகஸ்ட் 31 ஆந் திகதிய 353(5) ஆம் இலக்க | கடந்த 5 ஆண்டுகளாக பயன்படுத்தப்படாதுள்ள சொத்துக்களை முடிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) **நகர சபைகள் நிதி ஒழுங்கு விதிகள்** | |
| இல. 15 | வரி செலுத்துனர்களிற்கு வியாபார அனுமதிப்பத்திர கட்டணச் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் பிரகாரம் 2010திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்திற்கு மேலான வருமானம் ரூபா 18,544,975 ஆக இருந்ததுடன் இதனையொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்திற்கு மேலான வருமானம் ரூபா 7,405,477 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பவை பற்றிய நிலைமைகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | பாதிடப்பட்டவை | உள்ளபடியானவை | 31 திசெம்பரில் திரண்ட நிலுவை | பாதிடப்பட்டவை | உள்ளபடியானவை | 31 திசெம்பரில் திரண்ட நிலுவை |
| | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' |
| வாடகை மற்றும் வரிகள் | 1,100 | 1,051 | 3,729 | 1,280 | 1,044 | 3,745 |
| குத்தகை வாடகை | 3,284 | 4,210 | 719 | 1,838 | 2,119 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 203 | 224 | 6 | 227 | 176 | - |
| ஏனைய வருமானங்கள் | 26,354 | 34,465 | 1,609 | 26,149 | 25,086 | 722 |

### 2.2.2 நீதிமன்றத் தண்டப் பணம்

பல்வேறு நியதிச்சட்டங்களின் கீழ் 2010 திசெம்பர் 31 வரை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தினால் சேகரிக்கப்பட்டு பிரதான செயலாளரிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த ரூபா 1,569,500 நீதிமன்றத் தண்டப்பணத்தினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 முத்திரைக் கட்டணங்கள்

2010 ஆம் ஆண்டிற்காகப் பெற்றப்பட வேண்டிய முத்திரைக் கட்டணங்களை பதிவாளர் நாயகத்திடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.4 சுற்றாடல் அனுமதிப்பத்திர கட்டணங்களை அறவிடாமை

1988 இன் 86 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரபை அதிகாரச்சட்டத்தின் 26 ஆம் பிரிவு மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க திருத்திய அதிகாரச்சட்டத்தின் பிரகாரம்

2000 நவம்பர் 22 ஆந் திகதிய 1159.∴22 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலிற்கமைய 2001 செப்தம்பர் தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் குறிப்பிட்ட நோக்கங்களிற்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களை விநியோகிக்கும் அதிகாரம் தொடர்புடைய உள்ளூராட்சி அதிகாரசபைகளிற்கு பகிரப்பட்டிருந்தது. இருந்த போதிலும் 2010 ஆம் ஆண்டில் அனுமதிப் பத்திரங்களை பெற்றுக்கொள்ள வேண்டிய சபையின் அதிகாரப்பிரதேசத்திற்குட்பட்ட 28 நிறுவனங்களிற்கு அனுமதிப் பத்திரங்களை வழங்கத் தவறியமை காரணமாக வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

### 2.2.5 அரசிறைக் கடனாளிகள்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பில் அறவிடப்பட வேண்டிய ரூபா 6,063,000 வாடகை, வீதவரிகள், அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் மற்றும் ஏனைய வருமானங்களை அறவீடு செய்வதற்கு 2010 டிசெம்பர் 31 வரை தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவுகள் தொடர்புடைய முரண்களுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | **பாதீடு செய்யப்பட்டவை** | **உள்ள படியானவை** | **முரண்** | **பாதீடு செய்யப்பட்டவை** | **உள்ள படியானவை** | **முரண்** |
| | **ரூபா '000'** | **ரூபா '000'** | **ரூபா '000'** | **ரூபா '000'** | **ரூபா '000'** | **ரூபா '000'** |
| ஆளுக்குரிய | | | | | | |
| வேதனம் | 21,594 | 19,451 | 2,143 | 21,779 | 19,118 | 2,661 |
| ஏனையவைகள் | 2,917 | 1,954 | 963 | 2,462 | 1,902 | 560 |
| உப மொத்தம் | 24,511 | 21,405 | 3,106 | 24,241 | 21,020 | 3,221 |
| **மூலதனச் செலவு** | 11,712 | 3,788 | 7,924 | 9,800 | 7,098 | 2,702 |
| முழு மொத்தம் | 36,223 | 25,193 | 11,030 | 34,041 | 28,118 | 5,923 |

## 2.4 மனித வள முகாமைத்துவம்

### 2.4.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியனர் எண்ணிக்கை

2010 திசெம்பர் 31 இல் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியினர் எண்ணிக்கையும் உள்ளபடியான பதவியினர் எண்ணிக்கையும் பற்றிய தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவி வகை | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| பதவிநிலை மட்டம் | 03 | - |
| இரண்டாம் மட்டம் | 27 | 25 |
| ஆரம்ப மட்டம் | 55 | 50 |
| ஏனையவர்கள் (சமயாசமயம்/தற்காலிகம்) | - | 06 |
| மொத்தம் | 85 | 81 |

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.5.1 பெறவேண்டிய கணக்குகள்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 2,587,353 ஆக இருந்ததுடன் அதில் 01 வருடத்திற்கும் மேலாக பெறவேண்டியிருந்த தொகை ரூபா 3,729,181 ஆகும்.

### 2.5.2 பெறவேண்டிய பதவியணிக் கடன்கள்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய பதவியணிக் கடன் மீதிகளின் மொத்தம் ரூபா 2,587,353 ஆக இருந்ததுடன் அதில் ஒரு வருடத்திற்கும் மேலாக பெறவேண்டியிருந்த தொகை ரூபா 1,373,963 ஆகும்.

### 2.5.3 அசைவுறாத நடைமுறைச் சொத்துக்கள்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருடத்திற்கும் மேலாக அசைவுறாதிருந்த நடைமுறைச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 48,235 ஆகும்.

### 2.5.4 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

பௌதீகப் மெய்மையாய்வுச் சபை அறிக்கையினால் உறுதிப்படுத்தப்படாது 2010 திசெம்பர் 31 இல் காணப்பட்ட புத்தகப் பெறுமதியின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டிருந்த சொத்துக்களின் பெறுமதி ரூபா. 16,133,962 ஆகும்.

### 2.6 நோக்கத்திற்கு முரணான செயற்பாடுகள்

சட்டத்தினால் நகர சபைக்கு வழங்கப்பட்டுள்ள தொழிற்பாடுகளிற்கு அப்பாற்பட்ட நோக்கங்களிற்காக பின்வரும் செலவினம் செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.
சர்வதேச அரச சார்பற்ற மற்றும் அரச சார்பற்ற வீடமைப்புத் திட்ட வீடமைப்பு வேலைகளிற்காக சபையின் நிதியிலிருந்து ரூபா 6,570 மேலதிகநேரப்படி செலுத்தப்பட்டிருந்தது.

### 2.7 போதிய அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

2009 ஜனவரி 28 ஆந் திகதிய பீரீ/01/2009 ஆம் இலக்க வட மாகாண திறைசேரிச் சுற்றறிக்கைக்கு முரணாக பொருள் மைய்மையாய்வுச் சபை மற்றும் அகற்றல் சபையின் அங்கத்தினர்களிற்கு ரூபா 9,250 தொகையான படி செலுத்தப்பட்டிருந்தது

### 2.8 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2010 ஜனவரி தொடக்கம் திசெம்பர் வரை செலுத்தப்பட்டிருந்த ரூபா 121,500 இலிருந்து ரூபா 8,650 நிறுத்தி வைத்தல் வரியினை அறவிட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 ஆம் ஆண்டிற்கான பெறுமதிசேர் வரி பட்டியலில் உள்ளீட்டு வரியினை உள்ளடக்காமை காரணமாக ரூபா 192,336 வரமான இழப்பு ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) பத்து நிலையான சொத்துக்களின் பெறுமதியினை மதிப்பிட்டு கணக்குகளிற்கு எடுத்து வந்திருக்கவில்லை.

(ஈ) 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டம் மற்றும் 2000 நவம்பர் 22 ஆந் திகதிய 1159/22 ஆம் இலக்க வர்த்தமானி

அறிவித்தலின் பிரகாரம் நகரசபையினால் பேணப்பட்டு வருகின்ற அறுவைக் கொட்டில்களிற்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப் பட்டிருக்கவில்லை. கட்டளைகள்சட்டத்தின் (அத். 608) 10 ஆம் பிரிவின் பிரகாரம் வேண்டப்பட்டவாறு அறுவைக் கொட்டில்களின் எண்ணிக்கை விபரங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) வீதி விளக்குகள் பராமரிப்புச் செலவினத்தினை மீளப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கை மின்சார சபையுடன் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடாமை காரணமாக நகர சபைக்கு வருமானம் இழக்கப்பட்டிருந்தது. வீதி விளக்குகள் பராமரிப்புச் செலவினம் தனியாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை..

(ஊ) உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடாது வீதி விளக்குகளை பராமரிப்புச் செய்வதற்காக ரூபா 41,234 செலவினம் ஏற்பட்டிருந்தது.

## 2.9 செயலாற்றல்

---------------------

கணக்காண்டின் தொடக்கத்தில் சபையினால் செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக அடைந்து கொள்வதற்கு எதிர்பார்த்த குறிக்கோல்கள் மற்றும் அதன் மீதான செயன்முன்னேற்றத்தினை மதிப்பீடு செய்ய முடியவில்லை.

## 2.10 உள்ளகக் கணக்காய்வு

-------------------------------------------

நகர சபையில் போதிய அளவில் உள்ளகக் கணக்காய்வு இடம் பெற்றிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(அ) கணக்கீடு

(இ) வருமான நிர்வாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்